இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 14.05.2026

# எதிர்க்கட்சித் தலைவரின் எழுச்சி உரை!

**புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகர், துணை சபாநாயகரை வாழ்த்தி, சட்டப்பேரவையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை என்பது வரலாற்றுச் சிறப்பு மிக்க எழுச்சி உரையாகவே அமைந்திருந்தது. பெரும்பாலும் புதிய உறுப்பினர்கள் நிறையப் பேர் அவைக்குள் வந்திருப்பதால் இந்த உரை அவர்களுக்கு எடுத்த சட்டசபைப் பாடமாகவும் அமைந்திருந்தது.**

அன்றைய சென்னை மாகாணத்துக்கு 1920 ஆம் ஆண்டு முதல் பொதுத் தேர்தல் நடந்தது. அதில் திராவிட இயக்கத்தின் தாய் அமைப்பான நீதிக்கட்சி எனப்படும் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் ஆட்சி அமைத்தது.

நீதிக்கட்சியின் நீட்சியாக தந்தை பெரியார் அவர்களால் திராவிடர் கழகம் என்ற சமூக சீர்திருத்த அமைப்பு உருவானது. அந்தச் சமூக சீர்திருத்தக் கருத்துகளை நடைமுறைப்படுத்த திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் இயக்கத்தை பேரறிஞர் அண்ணா உருவாக்கி, 1967 ஆம் ஆண்டு முதன்முதலாக கழகத்தை ஆட்சியில் அமர்த்தினார். ஐந்து முறை திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்தி நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியாகத் திகழ்ந்தார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். ஆறாவது முறையாக ஆட்சியைக் கைப்பற்றி, இந்தியாவே வியந்து பார்க்கும் திராவிட மாடல் ஆட்சியைக் கொடுத்தார் திராவிட நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

இந்தத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையை மக்கள் வழங்கவில்லை. தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது த.வெ.க. இந்தச் சூழலில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தகுதியோடு சபைக்குள் சென்றுள்ளது தி.மு.க.

துணை முதலமைச்சராக இருந்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி திராவிட மாடல் ஆட்சிக்கு பேரும் புகழும் ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களை எதிர்க்கட்சித் தலைவராக இருந்து செயல்பட ஆணையிட்டுள்ளார் திராவிட நாயகன், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களின் போதும், இரண்டு சட்டமன்றத் தேர்தல்களின் போதும் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று, சுற்றிச் சுழன்று பணியாற்றியவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள். இளைஞரணிச் செயலாளராக இருந்து பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை கழகத்தை நோக்கி ஈர்த்தது மட்டுமல்ல; அவர்களை, கொள்கை வார்ப்புகளாக வார்ப்பித்தவர் மாண்புமிகு உதயநிதி அவர்கள்.

**ஆட்சித் தகுதி, கட்சித் தகுதி ஆகிய இரண்டு தகுதிகளோடு வளர்ந்த அவர், தமிழ்நாடு சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பெடுத்திருப்பது மிகச் சிறப்பு ஆகும். தமிழினத் தலைவர் கலைஞரும், திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து, அன்றைய ஆளும்கட்சியின் தவறுகளை தினந்தோறும் சுட்டிக் காட்டி சிம்ம சொப்பனமாக இருந்தவர்கள் என்பதுதான் வரலாறு. அத்தகைய வரலாற்றின் தொடர்ச்சி தான் நான் என்பதை முதல் நாள் ஆற்றிய உரையிலேயே மெய்ப்பித்துக் காட்டிவிட்டார் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.**

தனது முதல் உரையையே முத்திரை பதிக்கும் உரையாக ஆற்றி விட்டார் மாண்புமிகு உதயநிதி அவர்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர், திராவிட மாடல் ஆட்சியைத் தந்த மு.க.ஸ்டாலின் ஆகியோரை வணங்கித் தொடங்கினார். தன்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி மக்களுக்கு நன்றி சொன்னார். தி.மு.க. கூட்டணிக்கு வாக்களித்த 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கு நன்றியைத் தெரிவித்தார். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்து நெகிழ வைத்தார் மாண்புமிகு உதயநிதி அவர்கள்.

இறுக்கமான சூழலை உடைக்கும் வகையில் மாண்புமிகு உதயநிதி அவர்களின் பேச்சு அமைந்திருந்தது. முதலமைச்சர் விஜயும், பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜே.சி.டி.பிரபாகரனும், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் உதயநிதி அவர்களும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். இதனை சுட்டிக் காட்டிப் பேசினார் மாண்புமிகு உதயநிதி.

**“ஒரே கல்லூரியில் நாம் படித்திருந்தாலும் அரசாங்கத்தை நடத்துவதில் தி.மு.க. தான் சீனியர் பேட்ச். அது உங்களுக்குத் தெரியும். 1967-லேயே ஆட்சிக்கு வந்தது தி.மு.க. நாங்கள்தான் சீனியர்ஸ். அந்த அடிப்படையில் எங்களின் அறிவையும் அனுபவத்தையும் நாங்கள் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருக்கிறோம்”** என்று சொன்னதை பேரவையே ரசித்தது. முதலமைச்சர் விஜய் அப்போதுதான் சிரித்தார்.

**“திராவிட முன்னேற்றக் கழகம் இந்தச் சட்டப் பேரவையில் எதிரிக் கட்சியாக இல்லாமல், ஒரு ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக நிச்சயம் செயல்படும். எங்கள் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி, திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே ஒரு ஆக்க சக்திதான்” என்பதை ஆணித்தரமாகச் சொன்னார் மாண்புமிகு உதயநிதி அவர்கள். அதே நேரத்தில் பலவீனமான ஆளும்கட்சி நீங்கள்** என்பதையும் அழுத்தமாகச் சொன்னார் மாண்புமிகு உதயநிதி அவர்கள்.

அமைச்சரவைப் பொறுப்பேற்ற அன்று, தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது. இதனைச் சுட்டிக் காட்டி கடுமையான கண்டனத்தை பதிவு செய்யத் தவறவில்லை மாண்புமிகு உதயநிதி. பா.ஜ.க.வின் மரபுகளுக்கு நீங்கள் அடிபணியக் கூடாது என்பதை, புதிய அரசுக்கு புத்திமதியாகச் சொன்னார்.

**“நடந்து முடிந்த தேர்தலில் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையை ஆளுங்கட்சிக்கு மக்கள் வழங்காமல் போனாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் தேர்தலைச் சந்தித்து வென்ற தோழமை இயக்க சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு ஆட்சி அமைத்திருக்கக்கூடிய புதிய அரசிற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.”** என்ற வார்த்தைகளில் மாண்புமிகு உதயநிதி அவர்களின் நுட்பமான ஆளுமைத் திறன் வெளிப்பட்டது. **ஆளும் கட்சியினருக்கு கோபம் ஏற்படுத்தாத சொற்களால், உண்மையை உடைத்துச் சொல்லி அதனை அவைக் குறிப்பில் ஏற்றி விட்டார் மாண்புமிகு உதயநிதி.**

**“வெல்க தமிழ், வாழ்க தமிழ்நாடு! மக்களைப் பிரிக்கும் சனாதனம் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும்” என்று தனது உரையை நிறைவு செய்துள்ளார் மாண்புமிகு உதயநிதி. திராவிட முன்னேற்றக் கழகம் தனது கொள்கை முழக்கத்தை எப்போதும் கைவிடாது** என்பதற்கான எடுத்துக்காட்டாக எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு உதயநிதி அவர்களின் உரை அமைந்திருந்தது.

●●

# அரசின் வீடு கட்டும் திட்ட பயனாளிகள் அச்சம்!

## ஆட்சி மாற்றத்தால் கனவு நனவாகுமா என சந்தேகம்

சென்னை, மே 14-

கடந்த ஆட்சியில் அரசின், ‘கலைஞர் இல்லம்’ திட்டத்தில், தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள், புதிய ஆட்சியில் தங்களுக்கு வீடு கிடைக்குமா என்ற சந்தேகத்தில் அச்சத்துடன் உள்ளனர்.

குடிசை வீடுகளில் வாழ்பவர்கள் பயன் பெற, தி.மு.க., ஆட்சியில் ‘கனவு இல்லம் திட்டம்’ துவக்கப்பட்டது. இத்திட்டத்தில், குடிசை வீடுகளில் வாழ்வோர், குறைந்தபட்சம், 300 சதுர அடி முதல், அதற்கு மேலாக வீடுகளை கட்டிக்கொள்ளலாம். வீட்டுமனை, பயனாளியின் பெயரில் இருக்க வேண்டும். பயனாளிக்கு மாநில அரசு, 3.5 லட்சம் ரூபாய் வழங்கும்.

அத்துடன் வீடுகட்டும் பணிக்கு நுாறுநாள் திட்டத்தில் உள்ள பணியாளர்கள், 90 வேலை நாட்களை வழங்குவர். கழிப்பறை கட்டிக்கொள்ளவும் 12,000 ரூபாய் வழங்கப்படும். இவ்வகையில், 4 லட்சம் ரூபாய் வரை பயனாளி பெறுவார். இத்திட்டத்தில் ஆண்டுதோறும் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

கடந்த ஆட்சியின் இறுதி காலத்தில் மதுரை மாவட்டத்தில், 3,300 பேர், மாநில அளவில் ஒரு லட்சம் பேருக்கு மேல் அரசியலுக்கு அப்பாற்பட்டே தேர்வு செய்யப் பட்டுள்ளனர். பயனாளிகள் தேர்வு வீடு வந்தது.

இதையடுத்து, கட்டும் திட்டம் தேக்கமடைந்தது. பயனாளிகள் கடந்த ஒன்றரை மாதங்களாக காத்திருந்த நிலையில், தேர்தல் முடிவுகளால் ஆட்சி மாற்றம் நிகழ்ந்து விட்டது. இதனால், கடந்த ஆட்சியில், வீடு கட்ட தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள், புதிய வீடு கனவு நிறைவேறுமா என்ற அச்சத்துடன் உள்ளனர்.




## திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

# முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, மே 14-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு, முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதுகுறித்து மாவட்ட தி.மு.க. அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தியில் நாளை (15.05.2026 வெள்ளிக்கிழமை) காலை 9.30மணிக்கு, திருவண்ணா மலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

செயற்குழுக் கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகிக்கிறார்.

முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டத்தில் கழக ஆக்கப்பணிகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு, தி.மு.க. சட்டமன்ற கொறடாவும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பகுதிக் கழக பொறுப்பாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டாக்டர் நல்லி குப்புசாமி – டாக்டர் வி.ஜி.சந்தோஷம் – முனைவர் ம. இராசேந்திரன் பங்கேற்பு!

# கவிதை உறவு - 54 ஆம் ஆண்டு விழா!

## முனைவர் கோ.விசுவநாதன் தலைமையேற்று விருதுகள் வழங்குகிறார்!

## ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனின் நூல்கள் வெளியீடு!

சென்னை, மே 14-

கவிதை உறவு - வானதி பதிப்பகத்தின் 54ஆம் ஆண்டு விழா 18.05.2026 - திங்கள் மாலை 6 மணிக்கு தியாகராயர் நகர் வாணி மகால் ஜி.என்.செட்டி சாலையில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு வி.ஐ.டி. பல்கலைக் கழக நிறுவனர்-வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் தலைமை தாங்கி விருதுகள் வழங்குகிறார்.

விழா மலரை வெளியிட்டு டாக்டர் நல்லி குப்புசாமி வாழ்த்துரை வழங்குகிறார்.

மலரை பெற்று டாக்டர் வி.ஜி.சந்தோஷம் வாழ்த்துரை வழங்குகிறார்.

சிறந்த நூல்களுக்கு பரிசுகள் வழங்கி முனைவர் ம.இராஜேந்திரன் நிறைவுரையாற்றுகிறார்.

இவ்விழாவில் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் எழுதிய ‘திறந்த வெளிப் பள்ளிக்கூடம்’ நூலை கவியருவி அப்துல் காதர் வெளியிட ஜே.பாலசுப்பிரமணியம் பெற்றுக் கொள்கிறார்.

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனின் ‘போகிற வழியில் ஒரு போதிமரம்’ நூலை டி.கே.எஸ். இளங்கோவன் வெளியிட, அல்ஹாஜ் எச்.அகமது ருமைஸ்தீன் ஃபைஜி பெறுகிறார்.

டாக்டர் ஆர்.சிவகுமார் எழுதிய ‘நதியில் வரைந்த ஓவியம் நூலை கவிச்சுடர் கவிதைப்பித்தன் வெளியிட யூ.எஸ். எஸ்.ஆர். நடராசன் பெறுகிறார்.

கவிஞர் சந்திரகேசி எழுதிய ‘நீலவான நினைவுகள்’ நூலை டாக்டர் சேயோன் வெளியிட முத்தையா மோகன் பெற்றுக் கொள்கிறார்.

இவ்விழாவில், கவியருவி தி.மு.அப்துல் காதர், டி.கே.எஸ். இளங்கோவன், பேரா.மு.அப்துல் சமது ஆகியோரின் வாழ்த்துரை வழங்கின்றனர்.

கவிஞர் மு. முருகேஷ் கவிதை உறவு குறித்து அறிமுக உரையாற்றுகிறார்.

புலவர் எஸ். மதியழகன் வரவேற்புரையாற்றுகிறார்.

முனைவர் வானதி இராமநாதன் நன்றி கூறுகிறார்.

பரிசுகள் - விருதுகளை பேராசிரியர் தமிழ் இயலன், முனைவர் கோ. கணபதி சுப்பிரமணியன் திருமதி ஶ்ரீதேவி, கவிஞர் பாளை மாணிக்கம், தொலைப்பேசி மீரான் ஆகியோர் பெறுகின்றனர்.

கவிதை உறவு விருதுகளை கவிச்சுடர் கவிதைப்பித்தன்- வாழ்நாள் சாதனையாளர் விருது,

டாக்டர் சேயோன் - கலைமாமணி டாக்டர் விக்கிரமன் விருது, கவிஞர் காவிரிமைந்தன் - கவிதைச்செல்வர் விருது, கவிஞர்தியாக ரமேஷ் - கவிதைச்செல்வர் விருது, முத்துசாமி (ஞானசி) - பதிப்புச் செல்வர் விருது, என்.எஸ். பிரேமா- மகளிர் மாமணி விருது, திருமதி டாக்டர் அ.நசீமா - மகளிர் மாமணி விருது, டாக்டர் தாமரை ஹரிபாபு - எழுத்துச்செல்வர் விருது, திருமதி மர்ளியா சக்காப்- தமிழ்மாமணி விருது, கவிஞர் சோலை தமிழினியன்- சிற்றிதழ்ச் செம்மல் விருது,ஈசநேசன் மகஸ்ரீ- ஆன்மீகச் செல்வர் விருது பெறுகின்றனர்.

சிறந்த நூல் பரிசுகளை கவிஞர் தவசீலன், புலவர் சு. மதியழகன், ஆழ்வார் குறிச்சி சொக்கலிங்கம், மெய் ரூஸ்வெல்ட், திருமதி சிதம்பரம்மாள் ராதாகிருஷ்ணன், இயக்குநர் பிருந்தாசாரதி, திருமதி நிர்மலா மோகன், முனைவர் கார்முகிலோன், பாரதி ராஜேந்திரன் சோரடியா, திருமதி ஶ்ரீதேவி துரையரசு, .நரேந்திரன், திருமதி கல்யாணி ஶ்ரீதர், சின்னசாமி கணேசன் ஆடிட்டர் மற்றும் முனைவர் அருணா தொல்காப்பியன் ஆகியோர் பெறுகின்றனர்.

## கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட திமுக வேட்பாளரும் முன்னாள் சட்டபேரவை துணை சபாநாயகருமான

# கு.பிச்சாண்டி வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்தார்!




கீழ்பென்னாத்தூர்,மே.14-

கழகத் தலைவரும் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படி கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதிகீழ்பென்னாத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட ஆராஞ்சி, சோமாசிபாடி, கடம்பை, ஐங்குணம், சோ.நம்மியந்தல், காணலாபாடி, கழிக்குளம், கனபாபுரம், வழுதலங்குணம், மேக்கர், செவரப்பூண்டி, கீக்கர், கத்தாழம்பட்டு ஆகிய ஊராட்சிகளில் உதயசூரியன் சின்னத்தில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதியின் கழக வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ஆராஞ்சி ஆறுமுகம், நகர செயலாளர் சி.கே.அன்பு ஒன்றிய துணை செயலாளர் சிவக்குமார், இளம்பரிதி ஒன்றிய ஆராஞ்சி சேகர், இளைஞர் அணி அமைப்பாளர் சதிஷ்குமார், சூரியா, துணை அமைப்பாளர் காட்டுமலையனூ}ர் மணிகண்டன் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள் கழக உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.